உ
சிவமயம்



புங்குடுதீவைச் சேர்ந்த
அமரர்

# திரு. கந்தையா சபாரெத்தினம்,

மந்துவிலைச்சேர்ந்த
அமரர்

# திரு. பொன்னுத்துரை தயாபரன்

அவர்களின்
மறைவு குறித்து வெளியிடப்படும்

# நினைவு மலர்

01.05.2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

வையதரி வாழ்கின்ற வகையிலே

வாழ்ந்து

ஊரெல்லாம் நற்புகழ் சேர்த்து

தெய்வத்தின் பாதத்தில்

மலர்கள் ஆகிய எங்கள்

அன்புத் தெய்வங்களுக்கு

வாடாமலராய் இம் மலரை உங்கள்

பாதாரவிந்தங்களை வணங்கி

சமர்ப்பணம் செய்கின்றோம்.

ஏற்றிடுக அங்கிருந்தும்

எமக்காசி பொழிந்திடுக.

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மலர்வு:
09.02.1932

உதிர்வு:
31.03.2005

அமரர்

# கந்தையா சபாரெத்தினம்

அவர்கள்

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு தாரணம் அதி வெப்பம் பங்குனி
பூண்ட சஷ்டி அபரபக்கம் – உண்டு விட்டுச்
சென்றே சிவன் கழலைச் சேர்ந்தான் சபாரெத்தினம்
வென்றான் பிறவிப்பிணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மலர்வு: 22.01.1980

உதிர்வு: 20.11.2004

# அமரர்

# பொன்னுத்துரை தயாபரன்

## அவர்கள்

### திதி நிர்ணய வெண்பா

ஆண்டு தாரணம் அதி மழைக் கார்த்திகை
பூண்ட நவமி பூர்வ பக்கம் கூண்டு விட்டுச்
சென்றே சிவன் கழலைச் சேர்ந்தான் தயாபரன்
வென்றான் பிறவிப் பிணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாக்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே

## தேவாரம்

பொறையுடைய பூமி நீர் ஆனாய் போற்றி
பூதப் படையாள் புனிதா போற்றி
நிறையுடைய நெஞ்சின் இடையாய் போற்றி
நீங்கா தென் உள்ளத் திருந்தாய் போற்றி
மறையுடைய வேதம் விரித்தாய் போற்றி
வானோர் வணங்கப் படுவாய் போற்றி
கறையுடைய கண்டம் உடையாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

கண்களிரண்டும் அவன் கழல் கண்டு களிப்பன ஆகாதே
காரிகை யார்கள்தம் வாழ்வி லென்வாழ்வு கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடு மாறு மறந்திடும் ஆகாதே
மாலறியாமலர்ப் பாத மிரண்டும் வணங்குதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலோ டாடல் பயின்றிடும் ஆகாதே
பாண்டிநன் னாடுடை யான்படை ஆட்சிகள் பாடுதும் ஆகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து வெளிப்படும் ஆகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படும் ஆயிடிலே

# திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலாவொன்றே
உணர்வுசூழ் கடந்த தோருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந்தேனே
அளிவளருள்ளத் தாநந்தக் கனியே
அம்பலமாட ரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

# திருப்பல்லாண்டு

மீண்டு மனத்தவர் போமின்கண்
மெய்யடி யார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசர்க்கு
ஆட் செய்மின் குழாம் புகுந்து
அண்டம் கடந்த பொருள் அளவில்லதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டி பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேலுன்னை யென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டி நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ யாடும் போதுன்அடியின் கீழிருக்க வென்றார்.

# திருப்புகழ்

அகரமும் ஆகி அதிபனும் ஆகி
அதிகமும் ஆகி அகம் ஆகி
அயனென ஆகி அரிஎன ஆகி
அரன் என ஆகி அவர் மேலாய்
இகரமும் ஆகி எவைகளும் ஆகி
இனிமையும் ஆகி வருவோனே
இருநிலம் மீதில் எளியனும் வாழ
எனதுமுன் ஓடி வரவேணும்
மகபதி ஆகி மருவும் வலாரி
மகிழ்களி கூரும் வடிவோனே
வனமுறை வேடன் அருளிய பூஜை
மகிழ் கதிர்காமம் உறையோனே
செககண சேகு தகுதிமி தோதி
திமி என ஆடும் மயி லோனே
திரு மலி வான பழமுதிர் சோலை
மலைமிசை மேவு பெருமாளே

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே !
முப்பழம் நுகரும் மூஷிக வாகன !
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்தே
திருந்திய முதல்ஐந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து,
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறம்இது பொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்,
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி,
ஐம்புலன் தன்னை அடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்,
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்(து)
இருவினை தன்னை அறுத் திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க அறுத்தே,
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்கிசை நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே,
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்,
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி,
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்,
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து,
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்,
சண்முக தூலமுஞ் சதுர்முகச் சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்,
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்,
கருத்தினிற் கபால வாயில் காட்டி,
இருத்தி முத்தி இனிதெனக் கருளி,
என்னை அறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே,
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி யிரண்டிற் கொன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்தி, என்செவியில்
எல்லை இல்லா ஆனந் தமளித்(து)
அல்லல் களைந்தே, அருள்வழி காட்டிச்,
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்,
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி,
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி,
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்,
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி,
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்,
தத்துவ நிலையைத் தந்தெனைஆண்ட
வித்தக ! விநாயக ! விரைகழல் சரணே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கந்தர் சஷ்டி கவசம்



அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

**நேரிசை வெண்பா**

**துதிப்போர்க்கு வல்வினைபோம்**
**துன்பம் போம் நெஞ்சிற் பதிப்போர்க்குச் செல்வம்**
**பலித்துக் – கதித்(து) ஓங்கும் நிட்டையுங் கைகூடும்,**
**நிமலர் அருள்கந்தர் சஷ்டி கவசந்தனை.**

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடனஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக! வருக! மயிலோன் வருக!
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக! வருக!
வாசவன் மருகா வருக வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணப சரஹண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசரஹணப வருக! வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக!
என்னை யாளுமிளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங்குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளியையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவரத்தினம் பதித்த நற்சிராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடியதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகெண
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திருவடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்திருபல் முனைவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத் தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்லபூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக்காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒரு வழிப் போக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒரு தலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர் தொடைவாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோடநீ யெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகாசலனே சங்கரன் புதல்வா
கதிர் காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தைமுருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடனிரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியென் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய் பிரிய மளித்து
மைந்தனென்மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் மீரெட்டாய் வாழ்வார்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க்காண மெய்யாய் விளங்கும்
விழியாற்காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தெனதுள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை அதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
என்னைத்தடுத் தாட்கொள்ள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனாபதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுத னே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரிக் காப்பு

## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாகப் புனைவதற்கு
என்னின் று அருள்செய் எலிவா கனப்பிள்ளையாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற் கா.

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின் னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிருக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவனே அன்று நீ நோன்பிருந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின் னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிருக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
கும்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிஞ்சதென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைப்பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச்செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருள்வாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வும்முண்டு
இச்சகத்தி லுள்ளோரெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துவங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

**முற்றிற்று**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர். கந்தையா சபாரெத்தினம்

### அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

பல்வகைச் சிறப்புகளும் பெற்றுப் பலர் புகழும் யாழ்ப்பாண நகருக்கு அண்மையிலுள்ள சப்த தீவுகளுள் ஒன்றான புங்குடுதீவின் குறிகட்டுவான் பகுதியில் உள்ள பேச்சி அம்மன் கோயிலடியில் கார்காத்து, ஏர்காத்து, ஊர்காத்து விளங்கிய பரம்பரையில் வந்த கந்தையா மாரிமுத்து தம்பதியரின் நான்கு பிள்ளைகளில் சிரேஷ்ட புத்திரனாக 1932 ஆம் ஆண்டு மாசி மாதம் 09 ஆம் திகதி அவதரித்தவர் தான் அமரர் சபாரெத்தினம் அவர்கள்

இவர் ஆறாவது வயதில் புங்குடுதீவு அ. த. க பாடசாலையில் கல்வியை ஆரம்பித்த இவர் புங்குடுதீவு கணேச வித்தியாசாலையில் உயர் கல்வியை மேற்கொண்டார். அதன் பின் தனது கல்வியை இடைநிறுத்தி சாரதி தொழிலை மேற்கொண்டு வந்தார். 1957 இல் வைரமுத்து பாக்கியலட்சுமி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி ஜெகதீஸ்வரியை இல்லத்தரசியாக ஏற்று இல்லறம் நடாத்தி வந்தார் அவ் வேளையில் இவருக்கு ஜெயசங்கர், ரவிசங்கர், மதிசங்கர் என்னும் மூன்று புதல்வர்களும் ஸ்ரீகௌரி, ஜெயாகௌரி, தவச்செல்வி, லக்சுமிதேவி என்னும் நான்கு புதல்விகளையும் பெற்றெடுத்தார். 1990 இல் ஏற்பட்ட நாட்டுப் பிரச்சினையால் இடம் பெயர்ந்து புங்குடுதீவை விட்டு வெளியேறி கல்வியங்காடு, நல்லூர் ஆகிய இடங்களில் வாழ்ந்து இறுதியாக கிளிநொச்சியில் உள்ள செல்வாநகர் என்னும் இடத்தில் வாழ்ந்து வந்தார். செல்வா நகரில் வாழ்ந்து வந்தவேளை சிறிது சிறிதாக நோய் அவரைப் பற்றிக் கொண்டது. பிள்ளைகள் நான்கு பேர் கனடாவிலும் ஒருவர் சுவிஸ்சிலும் திருமணம் செய்து கொண்டு வாழ்கின்றனர். பிள்ளைகள் மூலம் பேரப்பிள்ளைகளைக் கண்ட இவர் நோய் முற்றாக பீடித்த நிலையில் 31.03.2005 இறைவனடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர். பொன்னுத்துரை தயாபரன்

### அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

இந்து மாகடலில் முத்தா ஒளி பெற்று விளங்கும் யாழ்பாடிய யாழ் மண்ணில் அடுத்து விளங்கும் மந்துவிலில் பொன்னுத்துரை நல்லம்மா தம்பதியரின் ஐந்து பிள்ளைகளில் ஒருவராக 1980 ஆம் ஆண்டு தை மாதம் 22 ஆம் திகதி அவதரித்தவர் தான் அமரர் தயாபரன் அவர்கள்.

இவர் தமிழீழ போக்குவரத்து கண்காணிப்பு பிரிவில் கடமை யாற்றியவர். 2000 ஆம் ஆண்டில் சபாரெத்தினம் ஜெகதீஸ்வரி தம்பதிகளின் புதல்வி லக்சுமிதேவியை இல்லத்தரசியாக ஏற்று இல்லறம் நடாத்தி வந்தார். அவ்வேளையில் லக்சிகா, கஜானி, றோகினி என்னும் மூன்று புதல்விகளையும் பெற்றெடுத்தார்.

காலம் யாரைத்தான் விட்டு வைத்தது காலன் யாரைத்தான் விட்டு வைத்தான். வாழ்வின் பயன்களைக் காண முன் மழை காரணமாக ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி அகால மரணம் அடைந்தார்.


வளம் பல கொண்ட தென்மராட்சியின் கலைக் கோயிலாம் மந்துவில் என்னும் நற்பதியில் வாழ்ந்த பொன்னுத்துரை நல்லம்மா தம்பதியரின் இளைய புதல்வனாக 1980.01.22 அன்று அவதரித்தார். இவர் இளமையிலே திறமையான செயல்கள் பலவற்றை தன்னகத்தே கொண்டு மிளிர்ந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை யா/ மந்துவில் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் துடிப்புடன் கற்று பின் தனது உயர் கல்வியை துணுக்காய் பாண்டியன் குளம் மகாவித்தியாலயத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றார். இவர் தனது இளமைப் பருவம் முதல் இறைபக்தியில் மிகுந்த ஈடுபாடும் நம்பிக்கையும் கொண்டவர். இவரது சகோதரர்கள் அமரர் உதயகுமார், புஸ்பலதா, புஸ்பராணி, பொன்ராசா, சந்திரவதனா, ஆவார்கள், இவர் குடும்பப் பொறுப்புக்களை கவனித்து வருகையில் தன் வாழ்க்கைத் துணைவியாக கிளிநொச்சியைச் சேர்ந்த சபாரத்தினம் ஜெகதீஸ்வரி தம்பதிகளின் புதல்வி லக்சுமி தேவியை கைப்பிடித்தார். இருவரும் ஈருடலும் ஓருயிருமாய் இல்லறம் என்னும் நல்லறம் நடத்துகையில் மூன்று புத்திரிகளாக லக்சிகா, கஜானி, ரோகினி, எனும் செல்வப் புதல்விகளைப் பெற்றனர். இவர் தனது செல்வாநகர் என்னும் இடத்தில் வாழ்ந்து பணி புரிந்து வந்தார். இவர் தனது இல்லற வாழ்வினை குடும்பத்துடன் மட்டும் அல்லாமல் அயலவர்களுடனும் அன்பாகவும் பண்பாகவும் ஆபத்துக்கு உதவுபவராகவும் வாழ்ந்து வந்தார். இப்படியாக வாழ்ந்து வருகையில் 20.11.2004 அன்று பிற்பகல் 3.00 மணியளவில் ஏற்பட்ட மரணத்தினால் இவ்வுலகைவிட்டு விண்ணகம் அடைந்தார்.

ஓம் சாந்தி!ஓம் சாந்தி!ஓம் சாந்தி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9.0/2004 என்ற குறியீட்டு பெயர் கொண்ட "சுனாமி" பற்றிய அறிவியல் உண்மைகள்

எவருமே எதிர்பார்த்திராத வேளையில் டிசம்பர் 26 ஆம் திகதி காலையில் எழுந்து ஊழித் தாண்டவமாடிய '9.0/2004' என்று குறியீட்டுப் பெயர் கொண்ட புவியதிர்வின் விளைவான சுனாமி, தென்னாசியப் பிராந்திய நாடுகளில் லட்சத்துக்கு மேற்பட்டோரைக் காவு கொண்டு, உலகின் பெரும் இயற்கைப் பேரனர்த்தங்களில் தன்னையுமொன்றாகத் தடம் பதித்துப் போயுள்ளது. கடந்த நாற்பதாண்டுகளில் இடம் பெற்ற இயற்கையழிவுகளிலேயே மிக மோசமானது என்ற பெயரையும், 1900 ஆம் ஆண்டின் பின்னர் இடம் பெற்றுள்ள சக்திவாய்ந்தவற்றிடை நாலாவது என்ற பெயரையும் அது பெற்றுள்ளது.

9.0 றிச்டர் அளவு கொண்ட கடலடிப் பூகம்பத்தின் விளைவான இந்தச் சுனாமி, கிழக்கே .மலேசியாவிலிருந்து, மேற்கே ஆபிரிக்கக் கரைவரை தனது கைவரிசையைக் காட்டியுள்ளது.

கின்னஸ் பதிவுகளின்படி 1896 ஆம் ஆண்டில் ஜப்பானியக்கரையருகில் உருவாகிய ஒரு சுனாமி, 27 ஆயிரம் பேரை மூழ்கடித்தது. இப்படியான இயற்கைப் பேரிடர்கள் அடிக்கடி நிகழாவிடினும் அவை இடம்பெறும் வேளைகளில், கூட்டம் கூட்டமாக மனிதர்களைக் கொன்றொழித்து கோடானுகோடி மதிப்புள்ள பொருள் நாசத்தையும் ஏற்படுத்திவிடுகின்றன. நினைவில் பதிந்த இப்படியான சமீபத்திய நிகழ்வுகளிலொன்று 1998 ஆம் ஆண்டில் மத்திய அமெரிக்காவில் இடம்பெற்ற 'மிச்' சூறாவளி. இது. ஹொண்டூராஸ் மற்றும் நிக்கரகுவாவில் பெரும் பகுதியைத் துடைத்து வழித்தது. பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியானார்கள். 1970களில் பங்களாதேஷ் சூறாவளி 5 லட்சம் பேர்வரை காவுகொண்டது. மணிக்கு 230 கி.மீ. வேகத்தில் வீசிய காற்றும் அதனால் கிளர்ந்த பேரலைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் காரணமாயின. ஏறத்தாழ இதேவிதமான ஒரு அழிவை 1976 இல் சீனா சந்தித்தது. 8.3 றிச்சட் அளவிலான பூகம்பமொன்று நாட்டின் வடக்கு கிழக்கு நகரான தாங்ஷென் நகரை நிர்மூலம் செய்தது. இதில் பலியானோரின் தொகை இரண்டரை லட்சமென உத்தியோகபூர்வத் தகவல்கள் தெரிவித்தாலும், உண்மையில் அந்தத் தொகை ஏழரை லட்சத்துக்கும் மேல் எனவும் தகவல்கள் வந்தன. ஏறத்தாழ ஓராண்டின் முன் ஈரானில் இடம்பெற்ற 6.3 றிச்சட் அளவு கொண்ட பூகம்பம் பாம் நகரையே அழித்ததுடன், அரை லட்சத்துக்கதிகமானோரையும் உயிர்ப்பலி கொண்டது.

சீனா - உண்மையில் ஆசியா முழுவதுமே இப்படியான இயற்கைப் பேரழிவுகளுக்கு நூற்றாண்டு நூற்றாண்டாக முகங் கொடுத்தே வந்துள்ளமை வரலாறாகியுள்ளது. 1556 இல் சீனாவில் ஏற்பட்ட புவி நடுக்கத்தில் எட்டு லட்சத்துக்கும் அதிகமானோரும், அதே நாட்டில் 1887 இல் மஞ்சள் நதி பெருக்கெடுத்த போது ஒன்பது லட்சம் பேரும், இந்தோனேஷியாவின் சும்பாவா தீவில் தம்போரா எரிமலை வெடித்த போது தொண்ணூறாயிரத்துக்கு மேற்பட்டோரும் இறந்து போனமை மனிதகுல வரலாற்றில் சோகப் பதிவுகளாயுள்ளன.

டிசம்பர் 26 சுனாமியின் மூலம் இந்தோனேஷியாவின் வட சுமாத்ராவின் மேற்குக் கரைக்கப்பால் அவ்வூர் நேரம் 7.59 இற்கு இடம்பெற்ற அந்த 9.0றிச்டர் அளவு கொண்ட கடலடிப் பூகம்பமாகும். அந்தப் பூகம்பத்தின் காரணமானவை - புவிக்கோளின் மேற்படைத் தகடுகளில் இந்தியத் தகடானது அசைந்து, பர்மாத் தகட்டின் கீழ் நகர்ந்தமையால் எழுந்த விசைகள் ! அது எவ்வாறு என்பதைப் பார்க்கலாம்.

நாலரை பில்லியன் ஆண்டுகள் வயதான இந்தப் புவிக்கோளத்தின் மேற்பரப்புக் குளிர்ந்திருப்பினும் அதன் உட்பகுதி இன்னமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொதித்து, அமெரிக்கா, தென்அமெரிக்கா, ஸ்கொட்டியா, ஆபிரிக்கா, அரேபியா, இந்தியா, பர்மியா, என்றெல்லாம் பெயரிடப்பட்டுள்ள இந்த மேல் ஓட்டுத் தகடுகளில் மேலே குறிப்பிட்டவாறு இந்தியத் தகடானது நகர்ந்து பர்மியத் தகட்டின் கீழ் சற்றுப் பதிந்தமைதான் டிசெம்பர் 26இல் நிகழ்ந்த விடயம். இப்படி இரண்டு தகடுகள் ஒன்றோடொன்று உராய்ந்து நகர்கையில் பூகம்பங்கள் வெடிக்கின்றன. உலகின் பெரும் பூகம்பங்கள் யாவும் இவ்வாறாக ஏற்பட்டவையே. 1960 இல் சிலியில் ஏற்பட்ட 9.5 அளவுகொண்ட பூகம்பம், 1964இல் அலஸ்காவில் 9.2 மற்றும் 1957 இல் 9.1 அளவு கொண்ட பூகம்பங்கள், 1952 இல் 9.0 அளவுடன் கம்சாத்காவில் உண்டான நில அதிர்வு யாவும் இந்த வகையினவே.

இவ்வாறான ஒரு பூகம்பம் கடலினடியில் ஏற்படும்போது, அதன் விளைவாய் எழுபவையே இந்த - பல்லாயிரம் மைல்வரை பரவக்கூடிய "சுனாமி"ப் பேரலைகள். இவை வெறும் புவியதிர்வு விசையால் மட்டும் ஏற்படுபவையல்ல. '9.0/2004' இன் வேளையில் புவியோட்டுத் தகடுகளின் விலகலால், ஏறத்தாழ ஆயிரம் கிலோ மீற்றர் நீளத்துக்கு, கிட்டத்தட்ட 10மீற்றர் உயரங்கொண்ட ஒரு பொருமல் கடலடியில் ஏற்பட்டதாகக் கருதப்படுகிறது. இதன் விளைவாய் (1000 கி.மீ ஐ 10மீ) கனவளவு கொண்ட நீர், இடம் பெயர்க்கப்படுவது புரிந்துகொள்ளப்படக் கூடியதே. பொதுவாக, விலக்கப்படும் இந்த நீரானது ஆழ்கடல் பகுதிகளில் 5-10மீற்றர் உயரமே கொண்ட அலைகளாக, மணிக்கு சில நூறு கி.மீ வேகத்தில் பரவினாலும் (உண்மையில், இந்த வேகம் நில அதிர்வு அலைகளின் வேகத்திலும் மிகக் குறைவானதே) கரைப் பகுதிகளை அண்மிக்கையில் - அவற்றின் வேகம் சற்றுக் குறைய நேரிடினும் ஆழங் குறைகிற காரணத்தால், உயரம் 10 - 20 மீற்றர்வரை அதிகரிக்கும். இதுதான் அநேகமாய் இங்கும் நடந்தது.

தகவல் – இணையத்தளம்

மூலம் :– ஈழநாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நாடுகளின் தேசிய சின்னங்கள்

- அமெரிக்கா - தங்கத்தடி
- அவுஸ்திரேலியா - கங்காரு
- அயர்லாந்து - ஹப்ரக் மலர்
- இந்தியா - சிங்கத்தின் தலை
- இலங்கை - வாளுடன் சிங்கம்
- ஈரான் - ரோஜா மலர்
- ஈராக் - சிவப்பு ரோஜா
- எகிப்து - தாமரை பூ
- கனடா - வெள்ளை மலர் (அல்லி)
- சீனா - திராட்சை மலர்
- சுவிற்லாந்து - இடல்விஸ் மலர்
- பாகிஸ்தான் - பிறை
- போலந்து - சோலி மலர்
- பிரான்ஸ் - அல்லி மலர்
- பிரித்தானியா - ரோஜா மலர்
- யப்பான் - கூட்டுப் புழுக்கூடு
- ருமேனியா - பூவரசம் பூ
- ஜேர்மனி - கான்பூ
- ஸ்பெயின் - கருடன்
- டென்மார்க் - கடற்கரைச் செடி
- ஐக்கிய நாட்டு சபையின் கொடி நீல நிறம். இரு ஒலிவ் மரக்கிளைகளுக்கு இடையில் உலகப் படத்தைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

31.03.2005 வியாழக்கிழமை அன்று இறையடி எய்திய குடும்பத் தலைவன் **அமரர் கந்தையா சபாரெத்தினம்** அவர்களினதும் 20.11.2004இல் இறையடி எய்திய குடும்பத் தலைவர் **அமரர். பொன்னுத்துரை தயாபரன்** அவர்களினதும் ஈமக்கிரியைகளில் நேரில்கலந்து கொண்டவர்களுக்கும், மலர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், உள்நாட்டில் இருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பி வைத்த உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும், சகல கிரியைகளையும் நடாத்தி வைத்த அந்தணப் பெரியோருக்கும், பரமன் புகழ் பாடியோருக்கும் இந்நினைவு மலரை குறுகிய காலத்துள் அழகுற அச்சிட்டுத் தந்த கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும், எமக்கு சகல வழிகளிலும் உதவி புரிந்த அன்பு உள்ளங்களுக்கும், எங்களின் இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நன்றி**

**செல்வாநகர்**
**கிளிநொச்சி.**

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org